**தலைப்பு 182 - வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அறிக்கை– 2014 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 08 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்டஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 672.6 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஆகும். ரூபா 641.6 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்புக்கள் ரூபா 31 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 4.61 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 468.3 | 454.7 | 13.6 | 2.90 |
| மூலதனம் | 204.3 | 186.9 | 174 | 8.52 |
| மொத்தம் | **672.6** | **641.6** | **31.0** | **4.61** |

### 2.2 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18201 | 8 | 8 | 4.1 | 5.4 | 52 | 9.2 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் கட்டுநிதிக் கணக்கில் கூட்டுமொத்தமாக ரூபா 11.4 மில்லியன் மீதி காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் ரூபா 0.1 மில்லியன் மீதி காணப்பட்டது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 182 – வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,950,000 தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 07 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அவ்விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 71 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மோட்டார் வாகனமொன்று 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சுக்குச் சொந்தமான டபள் கெப் வண்டியொன்று முன்னாள் பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சிற்கு 2006 ஆம் ஆண்டின் போது எடுத்தச் செல்லப்பட்டதன் பின்னர் அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வண்டியை மீண்டும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சிற்கு வழங்க கையளிக்க முடியாதென 2014 ஒக்தோபர் 20 ஆந் திகதிய கடிதத்தில் தெரிவித்திருந்ததாக 2015 யூலை 15 ஆந் திகதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வண்டி பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சிற்கு 2015 ஆகஸ்ட் மாதம் வரையில் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---------------------------------------------

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ஓராண்டிற்கு மேற்பட்ட 03 ஆண்டுகளுக்கு குறைந்த காலத்திலிருந்து நிலவி வரும் ரூபா 539,110 ஆன பொறுப்புக்கள் மற்றும் ஓராண்டிற்கு குறைவான காலமாக இருந்து வரும் ரூபா 8,053,843 பொறுப்புக்களாக ரூபா 8,592,953 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு மீளளிக்க வேண்டிய விமான பயணச்சீட்டுக் கட்டணம் ரூபா 504,260 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக ரூபா 615,700 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் பணியகத்தின் கணக்குகளுக்கிடையே ரூபா 111,440 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ii) அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கையடக்கத் தொலைபேசிப் பட்டியல் மீளளிப்பிற்காக மீளாய்வாண்டின் போது பணியகத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 7,334,796 தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 இணங்காமைகள்**

---------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

-----------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 138 | **1,073,501** | அமைச்சினால் 2014 சனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் வரை வாகன திருத்தச் செலவினம் நிதிப்பிரமாணம் 137 இன் பிரகாரம் திருத்தியமைத்தல்கள் சரியாக மேற்கொள்ளப்பட்டதாக திருப்திப்படாமல் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(3) | 146,480 | 2014 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கிற்கு UK City வங்கியின் பெயரில் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 146,480 ஆன வைப்புக்கள் தொடர்பாக 2015 மே 19 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | |
| 2007 செப்தம்பர் 11 ஆந் திகதிய 212/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.7 ஆம் பந்தி | | 2014 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு கடமை பிரயாணங்களில் ஈடுபட்ட அமைச்சின் 07 உத்தியோகத்தர் களுக்குரிய அறிக்கைகளின் பிரதிகள் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

(இ) அரச நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2011 நவம்பர் 15 ஆந் திகதிய பீஎப்டீ/ஆர்ஈடீ 01/04/08 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை கடிதத்தின் 01 ஆம் இலக்கத்தின் 2 ஆவது பந்தியின் தொகுதி இலக்கம் (V) | 102,519 | 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் மேற்குறித்த சுற்றறிக்கை நியதிகளுக்கு புறம்பாக 04 உத்தியோகத்தர்களின் தொலைபேசி பட்டியல்கள் மீளளிக்கப்பட்டிருந்தன. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 08 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,213 | 1,023 | 190 |
| (iv) | ஆரம்ப நிலை | 26 | 19 | 07 |
| (v) | ஏனையோர்(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | - | 03 |
| | மொத்தம் | 1,253 | 1,052 | 201 |

மீளாய்வாண்டின் இறுதியளவிலும் 201 வெற்றிடங்களை நிரப்பவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.